DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM

Present : Thiru. A. Saravana Senthil Kumar, B.Com., B.L.,
District Munsif, Uthamapalayam.

**OS.No. 113/2019**

**(CNR.No: TNTH06-000175 -2019 )**

| | | | |
|---|---|---|---|
| Name | : குழந்தை அந்தோணி | Religion | : |
| Father's Name | : | Occupation | : |
| Caste | : | Place | : |
| Age | : | **PW1** | |

---

நாள் :21.12.2023

**குறுக்கு விசாரணை**

**1)** எனது சொந்த ஊர் ராயப்பன்பட்டி ஆகும். என்னுடன் பிறந்த சகோதர்கள் எத்தனை பேர் என்றால் 3 தங்கை, ஒரு தம்பி ஆவார்கள். எனது தம்பி என்ன வேலை செய்கிறார் என்றால் எனது தம்பி சென்னையில் தனியார்நிறுவனத்தில் மேலாளராக வேலை செய்து வருகிறார். எனத தம்பி பெயர் என்ன என்றால் ராஜா ஆகும். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் அரசுபள்ளியில் ஆசிரியராக பணிபுரிகிறேன். எனது பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் நான் ஆசிரியராக பணிபுரிகிறேன் என்று கூறாமல் விவசாயம் என்று கூறியுள்ளதற்கு காரணம் என்ன என்றால் இந்த வழக்கை எனது அம்மா தாக்கல் செய்தார் அதனால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. பிராதில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான்.

2) நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டார் என்றால் சரிதான். தாவா சொத்தை மறுபடியும் நீதிமன்ற ஆணையர் மூலம் அளவீடு செய்ய எதிர்வாதி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த மனுவிற்கு எங்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். மேற்படி எதிருரையில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் என்னுடையது

தான். மேற்படி எதிருரையில் தமிழிலும், பிராதில் ஆங்கிலத்திலும் கையெழுத்து செய்து செய்துள்ளேன் என்றால் இரண்டு கையெழுத்து என்னுடையது தான். இந்த வழக்கிற்கான விபரங்களை நான் தான் கூறினேன் என்றால் சரிதான். பிராதில் உள்ள விபரங்கள் சரி என்று படித்துபார்த்து ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். பிராதில் எத்தனை சொத்து விபரம் காட்டியுள்ளேன் என்றால் ஒரு சொத்து காட்டியுள்ளேன். பிராதில் 3 லக்க சொத்துக்கள் காட்டியுள்ளேன் என்றும், அதில் 1வது லக்க சொத்தின் தென்புறம் உள்ள பகுதியை எனது தாயார் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். 2வது லக்க சொத்தை எனது தாயார் எனக்கு தானமாக கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 1வது லக்க சொத்தின் வடக்கு மாலில் யார் உள்ளார் என்றால் அதுபற்றி ஞாபகமில்லை.

3) 1வது லக்க சொத்தின் மேற்கே யார் உள்ளார் என்றால் ஒரு வீடு உள்ளது, யார் வீடு என்று தெரியாது. வடக்கே காலிமனை உள்ளது. தெற்கு வீடு உள்ளது, யார் வீடு என்று தெரியாது. பிராதில் 2வது லக்க சொத்து எனது சொத்தாக கூறுகிறேன் என்றால் சரிதான். 2 வது லக்க சொத்தின் வடக்கு மாலில் யார் உள்ளார் என்றால் ஞாபகமில்லை. கிழக்கு- தென்வடல் 15 அடி அகலப்பாதை உள்ளது. தெற்கு-ஆரோக்கியசாமி வீடு உள்ளது. மேற்கு-லூயிஸ் ஆசிரியர் வீடு உள்ளது. வடக்கு - காலி மனையிடம் உள்ளது. 1வது லக்க சொத்து மேற்குப்பக்கம் 15 அடி பாதை உள்ளதாக பிராது சொத்து விபரத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதே பாதை 2வது லக்க சொத்தின் கிழக்குப்பக்கம் உள்ளதாக சொத்து விபரத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். 1வது லக்க சொத்தின் வடபக்கம் கிழமேல் அளவு என்ன என்றால் 86 அடி ஆகும். 1வது லக்க சொத்தின் தென்பக்கம் கிழமேல் அளவு என்ன என்றால் ஞாபகமில்லை. 1வது லக்க சொத்திற்கு தென்பக்கம் கிழமேல் அளவு 101.1/2 அடி என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

4) 1வது லக்க சொத்தின் தென்பக்கம் நிலத்தை தான் எனது தாயார் கிரையம் வாங்கி எனக்கு தானமாக கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு எனக்கு எனது தாயார் தானம் கொடுத்த சொத்தின் கிழமேல் தென்புறம் 89 அடி

என்று கூறுகிறேன் என்றால் சரிதான். 1வது லக்க சொத்தின் எனது தாயார் கிரையம் பெற்ற கிழமேல் தென்புறம் 89 அடி போக மீதம் 12.1/2 அடி எந்த பக்கம் உள்ளது என்றால் கிழக்குப்பக்கம் பொதுப்பாதையாக உள்ளது. 1வது லக்க சொத்தில் தென்வடல் இருபக்கமும் 57 அடி என்று காட்டியுள்ளேன் என்றால் சரிதான். 2ம் லக்க சொத்தின் தென்வடல் இருபுறமும் 58 அடி என்று பிராதில் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். 1வது லக்க சொத்தின் வடக்கு மாலாக கே.ராஜரத்தினம் மனையிடம் என்று காட்டியுள்ளேன் என்றால் சரிதான். எனது சொத்தான 2ம் லக்க சொத்தான வடக்கு மாலாக ஜஸ்டீன் பிரபாகரன் நிலம் என்று காட்டியுள்ளேன் என்றால் சரிதான். பிராது 2வது லக்க சொத்து விபரத்தில் மேற்படி முந்தைய ஆவண விபரப்படி அமைந்துள்ள 8அடி அகல பாதையின் வழியாக நடந்து புலங்கிக்கொள்ளும் நடைபாதை பாத்தியமும் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

5) மேற்படி 8 அடி அகல பாதைக்கான முந்தைய ஆவணம் என்ன என்றால் ஜஸ்டின் பிரபாகரன் குடும்பத்தில் நடந்த பாகப்பிரிவினை பத்திரத்தின் படி கூறுகிறேன். மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். மேற்படி பாகப்பிரிவினை ஆவணமான வாசாஆ 2 ஆவணத்தில் நான் கூறுவது போன்று 8 அடி அகல பாதை எதுவும் கூறப்படவில்லை என்றால் சரிதான். முந்தைய ஆவணங்களில் இல்லாத பாதை உரிமையை எங்கள் ஆவணத்தில் புதிதாக சேர்த்து ஆவணம் ஏற்படுத்தியுள்ளோம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. பிராது மாதிரி வரைபடத்திற்கான விபரங்கள் நான் தான் கூறினேன் என்றால் சரிதான். பிராது மாதிரி வரைபடத்தில் திசை தவறுதலாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் எனது சொத்தாக ABCD என்று காட்டியுள்ள பகுதிக்கு வடக்கு என்ன காட்டியுள்ளேன் என்றால் 2ம் பிரதிவாதி இடம் என்று காட்டியுள்ளேன். 2ம் பிரதிவாதி யார் என்றால் ஞாபகமில்லை.

6) பிராது மாதிரி வரைபடத்தில் காட்டியுள்ள தென்வடல் பொதைப்பாதை எம்.ஆர்,ஆரோக்கியசாமி, எம்.ஆர்.குழந்தைசாமி வகையறாவினருக்கு

பாத்தியப்பட்டது என்றால் சொன்னால் சரியல்ல, நாங்கள் அவர்களது வாரிசான ஜஸ்டின் பிரபாகரனிடம் கிரையம் பெற்றுள்ளதால் எங்களுக்கும் பொதுப்பாதையில் உரிமையுள்ளது. மேற்படி பொதுப்பாதை மாதிரி வரைபடத்தில் ED பகுதி வரை உள்ளதாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். பொதுப்பாதையின் தென்வடல் அளவு அளவீடு செய்யவில்லை என்றால் சரியல்ல, அளந்தார்கள் தற்போது ஞாபகமில்லை. நீதிமன்ற ஆணையர் மற்றும் சர்வேயர் மேற்படி பொதுபாதையின் தென்வடல் அளவை அளவீடு செய்யவில்லை என்றும், நான் வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. இரு தரப்பினர்கள் சொத்துக்களையும் அளவீடு செய்தால் தான் பிராது மாதிரி வரைபடத்தில் IJ பகுதியில் அமைக்கப்பட்டுள்ளதாக நான் கூறும் கம்பிவேலி இடம் யாருக்கு பாத்தியப்பட்ட இடம் என்று தெரியும் என்றால் சரியல்ல, பொதுப்பாதையில் தான் கம்பி வேலி அமைத்துள்ளார். 1ம் பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட இடத்தில் மாதிரி வரைபடத்தில் HED பகுதியில் தான் அமைத்துள்ளார் என்றும், நான் தவறுதலாக IJ பகுதியில் கம்பி வேலி அமைத்துள்ளார் என்று சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

7) மாதிரி வரைபடத்தில் மேற்குப்பக்கம் 8 அடி பொது பாதை இருப்பதாக காட்டிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி எந்த வகையில் எங்களுக்கு இடையூறு செய்தார் என்றால் பொதுப்பாதையில் கம்பிவேலி அமைத்து இடையூறு செய்தார். அப்போது நான் அங்கு இருந்தேனா என்றால் இருந்தேன். அவ்வாறு பிரதிவாதிகள் இடையூறு செய்ததாக கூறும் சம்பவத்திற்கு முன்னர் என்ன நடந்தது என்றால் வேறு எதுவும் நடக்கவில்லை. இது சம்பவமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் எனது அம்மா புகார் கொடுத்தார். ( சாட்சி திரும்ப சொல்கிறார் ) புகாரை நான் தான் கொடுத்தேன். மேற்படி புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தை பார்த்தேனா என்றால் பார்த்தேன்.

8) ஆணையர் அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ள சர்வேயர்

வரைபடத்தில் நான் கிரையம் வாங்கிய சொத்து சர்வே எண்.5/1சி மற்றும் 5/3பி மற்றும் 5/3ஜி ல் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வேயர் வரைபடத்தில் மேற்படி சர்வே எண்களில் எவ்வளவு அளவுகள் உள்ளது என்று தனித்தனியாக பிரித்து காட்டப்படவில்லை என்றால் சரிதான். நான் எனது கிரைய ஆவணத்தின் அடிப்படையில் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன்.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

(ஒ.ம்) A. சரவணசெந்தில்குமார், B.Com., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.